**கொரோனா வைரஸ் (COVID-19): ஸ்காட்லாந்தின் மூலோபாயக் கட்டமைப்புப் புதுப்பிப்பு - நவம்பர் 2021**

நம்முடைய COVID-19: *ஸ்காட்லாந்தில் தொற்றுநோயை நிர்வகிப்பதற்கான எங்கள் அணுகுமுறையின் பல்வேறு கூறுகளை மூலோபாயக் கட்டமைப்பு அமைக்கிறது.* கடைசியாக Strategic Framework in June 2021 , புதுப்பித்ததிலிருந்து, ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தினோம், ஆனால் வைரஸைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும் பல சட்ட நடவடிக்கைகளையும் வழிகாட்டுதலையும் தக்க வைத்துக் கொண்டோம். இதனுடன், எங்கள் COVID-19 தடுப்பூசித் திட்டம் தொடர்ந்து விரிவடைந்து நிறைய பயனாளர்களிடம் சென்று சேர்கிறது.

இன்றைய அளவில் தொற்றால் பாதிப்பு அடைந்தவர்கள் எண்ணிக்கை மிகவும் உயர்ந்து கொண்டே உள்ளதால் மற்றும் COVID-19 அதிகப்படுவதால் எங்கள் NHS மிகவும் குறிப்பிடத்தக்க தொடர்ச்சியான அழுத்தங்களை எதிர்கொள்கிறது. நாங்கள் சவாலான குளிர்காலத்தை எதிர்நோக்குகிறோம் குறிப்பாக இன்ஃப்ளூயன்ஸா பருவ அபாயம் கொண்டதாக. COVID-19 தடுப்பூசியின் வீரியம் காலப்போக்கில் குறைந்து வருகிறது என்பதையும், தற்போது பூஸ்டர் தடுப்பூசி திட்டத்தின் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது என்பதையும் நாங்கள் நன்றாகவே அறிவோம்.

இந்த மூலோபாயக் கட்டமைப்பின் புதுப்பிப்பு எதிர்பார்க்கக்கூடிய அழுத்தங்களின் சூழல் பின்னணியிலும் மற்றும் COVID-19 வழக்குகள் அதிகரிக்கும் அபாயத்தின் மூலமும், தொற்றுநோயை நிர்வகிப்பதற்கான எங்கள் சமீபத்திய அணுகுமுறையை அமைக்கிறது. இந்த அணுகுமுறை வெற்றிபெற, நாம் நமது கூட்டு முயற்சியைக் கடைப்பிடிக்க வேண்டும், விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கடைபிடிக்க வேண்டும் மற்றும் தடுப்பூசிக்கு தகுதி இருக்கும் போது தடுப்பூசி எடுத்துக் கொள்ளவேண்டும்.

தொற்றுநோயின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலச் சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, எங்கள் COVID-19 பதிலுக்கு வழிகாட்டும் தற்போதைய மூலோபாய நோக்கம் பொருத்தமானது என்று நாங்கள் தீர்மானிக்கிறோம்: "சீராக வைரஸை அடக்குவதும் அதன் தீமைகளைத் தணிப்பதோடு நாம் மீண்டு, மீண்டும் நல்ல எதிர்காலத்தை நாம் குணமடைந்து கட்டியெழுப்பலாம்"

இதை உறுதிப்படுத்த முயல்வதன் மூலம் நாங்கள் நம்புவது என்னவென்றால், எங்களின் தலையீடுகள் தொற்றுநோயின் பல்வேறு தீங்குகளைத் தணித்து, அவசியமானதாகவும், விகிதாச்சாரமாகவும் இருக்கச் செய்வதன் மூலம், தொற்றுநோயின் கடுமையான கட்டத்தில் இருந்து ஸ்காட்லாந்தை வெளிவர உதவ ஒரு சிறந்த, நேர்மையான மற்றும் பசுமையான எதிர்காலத்திற்காக மீட்க மற்றும் மீண்டும் கட்டியெழுப்பும் நிலைக்கு நாங்கள் கொண்டுவருவோம் . தொற்றுநோயைச் சமாளிப்பதற்கு நாங்கள் கையாளும் பல்வேறு தலையீடுகள் எங்கள் மூலோபாயக் கட்டமைப்பின் ஆறு கூறுகளாக அமைக்கப்பட்டுக் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது.

**தடுப்பூசி**

தடுப்பூசி திட்டம் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து வருகிறது மற்றும் 12-17 வயதுடையவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது, அத்துடன் தகுதியான நபர்களுக்குப் பூஸ்டர் மருந்து ஊசியும் வழங்கப்படுகிறது . எங்களின் எப்போதுமில்லா மிகப்பெரிய இன்ஃப்ளூயன்ஸா தடுப்பூசி திட்டத்துடன் இப்போது பூஸ்டர் திட்டமும் இணைந்து வெளிவருகிறது. தடுப்பூசிமற்றும் நோய்த்தடுப்புக் கூட்டுக் குழுவின்(JCVI) ஆலோசனையைப் பின்பற்றி, நவம்பர் 15 ஆம் தேதி அன்று, 40 முதல் 49 வயதுடையவர்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படும் மற்றும் விரைவில் அவர்கள் ஊசி போட பதிவு செய்து கொள்ள முடியும். மேலும், 16 முதல் 17 வயதுடையவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்படும்.

**சோதனை செய்வது மற்றும் பாதுகாப்பது**

இலையுதிர் மற்றும் குளிர்காலத்தில் தொற்று பரவுவதைக் குறைப்பதில் சோதனை செய்வது மற்றும் பாதுகாப்பது தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கும். வரும் காலத்தில், தொற்றுநோயின் கடுமையான கட்டத்தில் இருந்து நாம் மாறும்போது பல இடங்களில் தோன்றி இருக்கும் COVID-ஐ நிர்வகிப்பதற்காக, எங்கள் நடவடிக்கைளில் சோதனையின் கூறுகள் முக்கியப் பகுதிகளாக இருக்கும் - குறிப்பாக மருத்துவப் பராமரிப்புக்கான சோதனை மற்றும் கண்காணிப்பு மற்றும் கண்காணிப்புக்கான சோதனை. மரபணு வரிசைமுறை மற்றும் கண்காணிப்புக்கான திறனை உறுதி செய்வது (கழிவு நீர் சோதனை உட்பட) அறிவுத்திறம் வழங்குவதில், மற்றும் தடுப்பூசி போடாமல் தப்பிக்கும் அபாயங்களைக் குறைப்பதற்கும் அல்லது சாத்தியமான மாறுபாடுகள் மூலம் தீவிர நோய் அதிகரிப்பு ஏற்பபடுவதைக் குறைப்பதற்கும் முக்கியப் பங்கு வகிக்கும்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

வைரஸைக் கட்டுக்குள் வைத்திருக்கப் பல சட்டத் தேவைகள் பின்பற்றபடுகின்றன பொது அமைப்புகள் கொண்ட பெரும்பாலான உட்புற கட்டமைப்பில் மற்றும் பொதுப் போக்குவரத்தில் கட்டாய முகக் கவசம் அணிவது இதில் அடங்கும் (இதில் இருந்து விலக்குப் பெற்றவர்களைத் தவிர). சில அதிகத் தொற்று நோய் பரிமாற்ற ஆபத்துக் கொண்ட அமைப்புகளுக்குத் தடுப்பூசி சான்றிதழ் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத் தேவைகளுக்குக் கூடுதலாக, மக்கள், வணிகங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்குத் தொற்று நோய் பரவும் அபாயத்தைக் குறைக்க உதவும் வகையில் பல்வேறு வழிகாட்டுதல்கள் உள்ளன. வீட்டிலிருந்து வேலை செய்வது மற்றும் பள்ளிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றுவது போன்ற விஷயங்களை இதில் உள்ளடங்கும். நோய் எதிர்ப்பு சக்தி மட்டும் போதுமானதாக இல்லை என்பதால்.தொற்றுநோயின் தீங்குகளைக் குறைக்க இந்த 'அடிப்படை நடவடிக்கைகள்' இணைந்து தற்போதைக்கு அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம். அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் தேவையானதாக மற்றும் விகிதாசாரமாக இருப்பதை உறுதிசெய்ய, நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்து வருகிறோம். தொற்றுநோயின் நிலை கணிசமாக மோசமடைந்தால் - உதாரணத்திற்கு, தடுப்பூசி குறைதல் அல்லது அதிகப் பரவக்கூடிய மற்றும் தீங்கு விளைவிக்கும் தொற்று நோய் மாறுபாடு காரணமாக - அந்த நேரத்தில் தொற்றுநோயியல் நிலைமைகளை

வெளிப்படுத்த, இலக்கு மற்றும் விகிதாசாரத் தலையீடுகளுடன் எதிர்க்கொள்ள நாங்கள் தயாராக இருப்போம். நாங்கள் இதை அவசியமில்லை என்று நம்புகிறோம், இருந்தாலும் ஆரம்ப, பயனுள்ள தலையீடு மூலம் பின்னர் கடுமையான நடவடிக்கைகளின் தேவையைத் தவிர்க்கலாம் என்பதை அறிவோம்.

**தொற்றுநோய் இறக்குமதி ஆபத்தை நிர்வகித்தல்**
வைரஸின் இறக்குமதிக்கு எதிராகவும் குறிப்பாகத் தொற்றுநோயின் புதிய வகைகளின் இறக்குமதிக்கு எதிராகவும் விகிதாசார எல்லை நடவடிக்கைகள் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

**பின்பற்றுவதை ஆதரித்தல்**
தடுப்பூசி, சோதனை, விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கடைபிடிப்பதை ஊக்குவிப்பதன் மூலம், தொற்றுநோய் பரவுவதைக் குறைத்து மேலும் கட்டுப்பாடுகளின் தேவையைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்தப் பகிரப்பட்ட முயற்சியில் எங்கள் கூட்டாளர்களுடன் தொடர்ந்து பயனுள்ள தகவல் தொடர்பு மற்றும் சந்தைப்படுத்தல், பங்குதாரர் மற்றும் பிற வகையான ஆதரவின் மூலம் பணியாற்றுவோம். தொடர்ந்து வலுவாகப் பின்பற்றுவது வைரஸைக் கட்டுக்குள் வைத்திருக்க இன்றியமையாததாக உள்ளது.

**நெருக்கடியின் தீங்குகளைத் தணிக்கப் பாதுகாப்பு மற்றும் ஆதரவை வழங்குதல்**
தொற்றுநோய் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், நிறுவனங்கள் மற்றும் வணிகங்களுக்குக் கவனிப்பு மற்றும் ஆதரவை வழங்குவது, தொற்றுநோயை நிர்வகிப்பதற்கான எங்கள் அணுகுமுறையில் உள்ள ஒரு முக்கிய அம்சம் ஆகும். குறிப்பாக COVID-19 மற்றும் 'நீண்ட கோவிட்' சிகிச்சையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. தொற்றுநோயால் ஏற்படும் பாதிப்புகளை மேலும் குறைப்பதற்கு நாங்கள் பொருளாதாரம் மற்றும் பரந்த சமூகம் முழுவதும் உள்ள துறைகளுடன் ஆதரவாகத் தொடர்ந்து நெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம். ஸ்காட்லாந்து முழுவதிலும் உள்ள மக்கள், வணிகங்கள் மற்றும் நிறுவனங்களின் தொடர்ச்சியான முயற்சிகளால் ஒருங்கிணைந்த ஆதரவுடன், இந்த நடவடிக்கைகள் தொற்றுநோயின் பரந்த தீங்குகளைத் தணிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் எங்கள் கவனம் COVID-19 மீட்டெழுதலில் செலுத்துகிறோம்.

**எதிர்காலத்தைப் எதிர்நோக்கி**
ஸ்காட்லாந்து முழுவதிலும் உள்ள மக்கள், வணிகங்கள் மற்றும் நிறுவனங்களின் தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் பங்களிப்புகளால் ஆதரிக்கப்படும், இந்த நடவடிக்கைகள் தொற்றுநோயின் பரந்த தீங்குகளைத் தணிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இது நிலையான மீட்புக்கான தளத்தை வழங்கும் மற்றும் சிறந்த மற்றும் நேர்மையான எதிர்காலத்தை மையமாகக் கொண்டு கவனம் செலுத்த:

- நல்ல, பசுமையான வேலைகள் மற்றும் நியாயமான வேலை;
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிதி பாதுகாப்பு; மற்றும்
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் நல்வாழ்வு.

எதிர்காலத்திற்கான பாடங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும், கற்றுக்கொள்ளவோம் - எங்களின் வரவிருக்கும் பொது விசாரணை என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பதை விளக்க உதவும், மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற சவால்களைச் சிறப்பாக நிர்வகிக்கவும் உதவும்.

சாத்தியமான COVID-19 எதிர்கால மேலாண்மையில் அடங்குபவை எவை என்றால், அவ்வப்போது பூஸ்டர் தடுப்பூசிகள், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் நோயறிதல் நோக்கங்களுக்காகத் தொடர்ந்து சோதனைகள், சர்வதேச பயண நடவடிக்கைகள் (மற்ற நாடுகளால் தக்கவைக்கப்பட்டவை உட்பட), கட்டிடங்களில் மேம்படுத்தப்பட்ட காற்றோட்டம், மேம்படுத்தப்பட்ட சுகாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சி, அறிகுறித் தென்படும் போது தானாக முன்வந்து முகமூடி அணிவது, மற்றும் தொற்று நோய்களால் பாதிக்கப்படும் போது வேலையில் இருந்து விலகி இருப்பது.

இந்த நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகள் COVID-19-ஐ சமாளிப்பதைத் தாண்டி நேர்மறையான பலன்களாக, நீண்ட காலத்திற்குப் பரந்த பொதுச் சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார நலன்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இவற்றில் பெரும்பாலானவை ஏற்கனவே நடைமுறையில் உள்ளது, பலரின் முயற்சிகள் மற்றும் புரிதலுக்கு நன்றி. அவை எவ்வளவு முக்கியமானவை என்பதையும், நம் வாழ்வில் மேலும் இயல்புநிலையை எவ்வாறு கொண்டு வருவது என்பதையும் நாங்கள் கற்றுக்கொள்கிறோம். நாங்கள் நல்ல பொதுச் சுகாதார நடவடிக்கைகள் நமக்கு அளிக்கக்கூடிய பாதுகாப்பை நிறைவு செய்து பராமரிக்கும்போது அதே வேளையில், தற்போது அவசியமான சில சட்ட நடவடிக்கைகள் அகற்றப்படுவதை அதிக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.